**ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு செயற்திட்டம் (ஐ - வீதி) - 2020**

------------------------------------------------------------------------------------------------------------

ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ - வீதி) செயற்திட்டத்தின் 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பகுதி – 1 இற்கான 2014 நவம்பர் 05 ஆம் திகதிய 3171 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க, பகுதி - 2 இற்கான 2015 மே 28 ஆம் திகதிய 3221 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) மற்றும் 3222 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் கடன் இலக்க மற்றும் பகுதி – 3 இற்கான 2015 டிசெம்பர் 11 ஆம் திகதிய 3325 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) மற்றும் 3326 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் இலக்க மற்றும் பகுதி – 4 இற்கான 2017 டிசெம்பர் 15 ஆம் திகதிய 3610 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை அதிகரித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பதும் நெடுங்கால விளைவுகளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 117,780 மில்லியனுக்குச் சமமான 906 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 104,000 மில்லியனுக்குச் சமமான 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 13,780 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் நிதித் திட்டம் பல்வேறு பகுதி வசதிகளின் கீழ் ஆறு பகுதிகளை கொண்டிருந்தது அதில் 4 வேறான கடன் உடன்படிக்கைகள் ஐ.அ.டொலர் 557 மில்லியனை நிதியீட்ட 2020 திசெம்பர் 31 வரை கையொப்பமிடப்பட்டிருந்நதுடன்.செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 ஜூன் 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2024 மார்ச் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

----------------------------------------------

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

----------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தோகை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.05 இன் பந்தி 36 இற்கு முறணாக, வெளிநாட்டு செயற்பாடுகள் மூலம் எழுந்த நாணயமாற்று வித்தியாசம் நிகழ்ச்சித்திட்டத்தின் தேறிய சொத்ததுக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 158.33 மில்லியன் | நிகழச்சித்திட்டத்தின் அடுத்துவரும் வருடத்தின் நிதிக்கூற்று தயாரிக்கும் போது இதனை சரிசெய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | வெளிநாட்டு செயற்பாடுகள் மூலம் எழுந்த நாணயமாற்று வித்தியாசங்கள் நிகழ்ச்சிதிட்டத்தின் தேறிய சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2,231.3 கி.மீ நீளம் கொண்ட 544 கிராமிய மற்றும் தேசிய வீதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருப்பினும், அதன் மீதான கிரயம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் படி ஒரு சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அறிந்துகொள்ள முடியாமலிருக்கும். | தனிப்பட்ட வீதிகளின் நிர்மான கிரயம் மேற்கூறிய கையளிப்பு செயன்முறை பூர்த்தியானதன் பின்னர் மாத்திரமே சரியாக வழங்க முடியுமாகவிருக்கும். | சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம் 01 இன் படி வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இற்கு முறணாக, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 08 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களிற்கெதிராக கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகளிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | 58.95 மில்லியன் | 2020 காலப்பகுதியுடன் தொடர்புபட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் 2021 இல் பெறப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் படி ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 07 பொதிகளின் மீள்நிர்மான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பராமரிப்பிற்காக ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிந்துகொள்ள முடியாமலிருக்கும். | 2021 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பிற்கு ஓர் ஏற்பாடு செய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் படி ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |

### 2.2 இணக்கஞ் செய்யப்படாத மீதிகள்

| நிதிக்கூற்றுகளின் படி பெறுமதி | தொடர்புடைய ஆவணங்களின் படி பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் பொறுப்பு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ------------- | ---------- | ----------- | -------------- | --------------- |
| ரூபா | ரூபா | ரூபா | | |
| ரூபா 5,806.1 மில்லியன் | பொது திறைசேரியின் பிரகாரம் ரூபா 7,132.43 மில்லியன் | 1,326.33 மில்லியன் | 2021 ஆம் ஆண்டு முதலிருந்து கணக்கிணக்கங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | தொடர்புடைய தரப்பினர்களுடன் கலந்துறையாடப்பட வேண்டியதுடன் வித்தியாசங்கள் குறைக்கப்படலும் வேண்டும். |
| | வெளிவாரிவளங்கள் திணைக்களத்தின் பிரகாரம் ரூபா 6,698.44 மில்லியன். | 892.34 மில்லியன் | | |

### 2.3 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | ------------- | -------------- | --------------------------- | -------------- |
| (அ) | ஒப்பந்தத்தின் குறித்த நிபந்தனையின் உப பிரிவு 14.6 | ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் குறைந்தபட்ச பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியால் 1.5 சதவீதமாகும். இருப்பினும், 20 பொதிகளின் கீழாக இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை பரிசீலனை செய்யும் போது 67 விடயங்கள் தேவையான நிபந்தனையிற்கு கீழ் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கோவிட் 19, பாதகமான காலநிலை, மூலப்பொருட்களின் குறைபாடுகள் போன்ற காரணங்களே ஒப்பந்ததாரரிற்கு மேலதிக கிரயம் ஏற்படுவதன் பெறுபேறாகலாம். உண்மையான நிபந்தனைகளை நாங்கள் கடைப்பிடித்தால் ஒப்பந்ததாரர்களின் காசுப்பாய்ச்சல் பாதிப்படைவதுடன், அவர்கள் குறைந்த செயலாற்றலை கூட அடையமுடியாமலிருக்கும். | கிரயம், நேரம், மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகளை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் ஒப்பந்ததாரர்களினால் அவர்களது சொந்த செலவில் வழங்க வேண்டியிருந்தும், வேறான ஒரு கொடுப்பனவு உருப்படி ஆரம்பகட்ட மற்றும் பொதுவான உருப்படிகளின் கீழான அளவைப்பட்டியலில் செய்யப்பட்டுள்ளமை ஒப்பந்ததாரரிற்கு மீளப்பெற முடியுமாக இருந்தமை | இத்தொகை ஒரு வேறான உருப்படியாக பீஓகியுவ்வில் வழங்கப்படாமலிருந்தால், ஏலதாரர் வேறொரு பீஓகியுவ் உருப்படிகளின் மேந்தலையில் அக்கிரயத்தினை உள்ளடக்கியிருப்பர். இருப்பினும், பொது நிபந்தனை மாற்றியமைக்கப்பட்டிருந்ததுடன் பீஓகியுவ் விலுள்ள அந்த கொடுப்பனவு உருப்படி கிழக்கு, வடக்கு மற்றும் மேல் | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவதானிக்கப்பட்டது. அதன்படி, மொத்தமாக ரூபா 564.45 மில்லியன் ஒப்பந்ததாரர்களினால் பெறப்பட்ட பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட ஒப்பந்ததாரர்களிடமிருந்து அத்தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாணங்களின் பொதிகளில் நீக்கப்பட்டுமிருந்தது. | |
| (இ) | ஒப்பந்தங்களின் பொது நிபந்தனையின் உபபிரிவு 15.3 | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட கேயு4, கேயு5, பியு2, பியு3, ஆர்2 மற்றும் ஜி1 ஒப்பந்தங்களில் முடிவுறுத்தல் பெறுமதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முடிவுறுத்தல் மற்றும் வேலைவழங்குனர் பெறுவனவுகளின் பெறுமதியிடல் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தபொதிகள் பீயு2, பீயு3, கேயு3, கேயு4, கேயு5 உடன் தொடர்புபட்டவர்களிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | முடிவுறுத்தல் பெறுமதி சரியான நேரத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| இல | கூறுகள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள்ஷ | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் கையளிப்பு. | தேசிய வீதிகளின் 218.19 கி.மீ மற்றும் கிராமிய வீதிகளின் 3,106.10 கி.மீ களின் வீதி புனர்நிர்மான வேலைகள் ஆரம்பகட்ட திட்டத்தின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியின் போது புனரமைக்க எதிர்பார்த்திருந்தும், தேசிய வீதிகளின் 104.13 கி.மீ மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டம் ஒப்பந்த கையளிப்பின் முன்னுரிமைகள் மீது தீர்மானிக்க வேண்டியுள்ளமை ஒவ்வொரு வருடமும் கிடைக்கப்பெறும் பாதீட்டு ஒதுக்கீட்டில் தங்கியுள்ளது. அதன்படி, செயற்திட்டம் ஆரம்ப திட்டத்தை மாற்ற தீர்மானித்ததுடன் முன்னுரிமை மாற்றங்களின் காரணமாக தேசிய வீதிகள் கையளிப்பில் தாமதமும் காணப்பட்டது. | நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப திட்டத்துடன் இணங்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய காலத்தில் இலக்கினை அடையவும் வேண்டும். |
| (ஆ) | தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கல். | கிராமிய வீதிகளின் 2,203.87 கி.மீ களின் புனரமைப்பு வேலைகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | 12 ஒப்பந்தங்கள் மந்தகரமான செயலாற்றல் மற்றும் ஒப்பந்த நிபந்தனையில் கூறப்பட்ட படி ஒப்பந்ததாரரினால் வேலைகள் கைவிடப்பட்டமை போன்ற காரணங்களினால் நிறுத்தப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலும், 12 ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட கிராமிய வீதிகளின் 1,000.43 கி.மீ நீளம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கல். | 12 கைவிடப்பட்ட ஒப்பந்தபொதிகளில், 03 ஒப்பந்தபொதிகள் 2019 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டிருந்தது, 2020 திசெம்பர் 31 இல் கூட மிகுதி வேலைகளை தொடர எவ்வித நடவக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 இல் முடிவுறுத்தப்பட்ட 03 ஒப்பந்த பொதிகளை மீள விலைமனு கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கைவிடப்பட்ட 12 ஒப்பந்த பொதிகளில், 05 ஒப்பந்த பொதிகளின் மிகுதி வேலைகள் மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டத்தினூடாக செய்து முடிக்க மீள கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீள்கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதி உண்மையான ஒப்பந்த விலையுடன் ஒப்பிடும் போது ரூபா 5,007 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது. | உடன்பட்டனர் முடிவுறுத்தப்பட்டு மீள்கையளிக்கப்பட்ட அவ் 12 ஒப்பந்தங்கள் அரசாங்கத்திற்கு மேலதிக கிரயமாகவிருந்தது. இவ் ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர்களின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக முடிவுறுத்தப்பட்டது. | மேலும் தாமதமின்றி நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஓர் தீர்ப்பனவு உடன்படிக்கை மீளாய்வாண்டின் போது கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 100,000 கி.மீ ஊடாக அதே தோல்வியுற்ற ஒப்பந்ததாரருடன் 04 கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் மீகுதி வேலைகளை பூர்த்திசெய்ய கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்தங்களின் பெறுமதி உண்மையான ஒப்பந்த பெறுமதியுடன் ஒப்பிடும் போது ரூபா 580.14 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது. | விலைத்தளம்பல்களினால் மேலதிக கிரயங்களிற்கு சாத்தியமாவதுடன் பெறுகை நடைமுறை, கைவிடலை செயற்படுத்துவதிலிருந்து தடுக்க ஒப்பந்ததாரரினால் எடுக்கப்பட்ட நீதிமன்ற ஒழுங்கு உத்தரவு, மிகுதி வேலையை வேறொரு ஒப்பந்ததாரரிடம் கையளித்தல் மற்றும் பத்திரங்கள், உத்தரவாத பத்திரங்கள் மற்றும் பொது மக்களிற்கு சிரமத்தை ஏற்படுத்துவதை நிராகரித்தல் போன்றன அதே ஒப்பந்ததாரரிற்கு அவ் ஒப்பந்தங்களை கையளிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்டன. | மேலும் தாமதமின்றியும் மேலதிக கிரயங்களின்றியும் நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 12 கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 2,668.47 மில்லியம் தொகையான செயலாற்றல் பத்திரத்தினை பணமாக மாற்ற மீளாய்வாண்டின் இறுதிவரை கூட நிகழ்ச்சித்திட்டதினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர்கள் உத்தரவாத பத்திரம் மற்றும் ஒப்பந்த பத்திரங்களை பணமாக்குவதற்கு நீதிமன்ற உத்தரவினை எடுத்திருந்ததுடன் வழக்கும் நடைமுறையில் உள்ளது. எனவே, பெறுமதிகளை மீளப்பெற்றுக்கொள்வது மற்றும் கைவிடல் மீதான பெறுவனவுகள் என்பன வழக்கு பூர்த்தியானதன் பின்னர் மாத்திரமே இறுதியாக்கப்பட முடியும். | பெற வேண்டிய மிகுதிகளை மீளப்பெற்றுக்கொள்ள நிகழ்ச்சித்திட்டத்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கடன் வழங்கும் முகவர் கைவிடப்பட்ட ஒப்பந்தங்களுடன் தொடர்புடய வேலை ஆரம்பிப்பு முற்பணத்தினை மீளப்பெற்று அதனை திருப்பிச் செலுத்த அறிவுறுத்தியிருந்தும், செயற்திட்டமானது 8 கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 1,830 மில்லியன் தொகையான பெற வேண்டிய வேலை ஆரம்பிப்பு முற்பணத்தினை மீளப்பெற்றுக்கொள்ள தவறியிருந்தது. அதன்படி, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த பெற வேண்டடிய வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 04 கைவிடப்பட்ட பொதிகள் உள்ளடங்களாக 12 பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 2,793 மில்லியனாகவிருந்தது. | ஒப்பந்ததாரர்கள் உத்தரவாத பத்திரம் மற்றும் ஒப்பந்த பத்திரங்களை பணமாக்குவதற்கு நீதிமன்ற உத்தரவினை எடுத்திருந்ததுடன் வழக்கும் நடைமுறையில் உள்ளது. எனவே, பெறுமதிகளை மீளப்பெற்றுக்கொள்வது மற்றும் கைவிடல் மீதான பெறுவனவுகள் என்பன வழக்கு பூர்த்தியானதன் பின்னர் மாத்திரமே இறுதியாக்கப்பட முடியும். | பெற வேண்டிய மிகுதிகளை மீளப்பெற்றுக்கொள்ள நிகழ்ச்சித்திட்டத்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | எம்எ03 மற்றும் என்இ03 ஒப்பந்தபொதிகள் 2018 திசெம்பர் மற்றும் 2020 பெப்ரவரியில் பூர்த்திசெய்யப்பட்டிருப்பினும், பூர்த்தியாக்கல் அறிக்கை (எஸ்எசீ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்ததாரரினால் கட்டாயம் செய்யப்பட வேண்டிய செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்புக்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏம்எ03 மற்றும் என்இ03 ஒப்பந்த பொதிகளிற்கான பூர்த்தியாக்கல் அறிக்கை (எஸ்எசீ) 2021 இல் இறுதியாக்கப்பட்டிருந்தது. | பூர்த்தியாக்கல் அறிக்கை தாமதமின்றி தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | ஜீ 1 பொதிகள் 2019 பெப்ரவரி 12 இல் நிறுத்தப்பட்டிருந்தும், பூர்த்தியாக்கல் கிரயம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஜி1 ஒப்பந்த பொதியின் பூர்த்தியாக்கல் கிரயம் 2021 இல் மதிப்பிடப்பட்டுள்ளது. | பூர்த்தியாக்கல் கிரயம் தாமதமின்றி தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ரூபா 158.2 மில்லியன் அவசர வேலைகளை பூர்த்திசெய்வதற்காகவும் 2019 ஆம் ஆண்டில் வடமேல் மாகாணத்திலுள்ள கைவிடப்பட்ட 05 ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட வீதிகளை வாகனங்கள் செல்லும் சாலையாக மாற்றவும் ஏனைய இரண்டு செயலிலுள்ள ஒப்பந்ததாரர்களினால் 2020 திசெம்பர் 31 வரை ஏற்பட்டிருந்தது. | மாறல் கட்டளைகள் அவசர பாதுகாப்பு வேலைகளில் கலந்துகொள்வதற்கு அவசரமாக தேவைப்படும் மிகுதி வேலைகளை பூர்த்திசெய்யவும் வீதிப்பிரிவுகளை வாகனம் செல்லும் சாலையாக்கவும் வழங்கப்பட்டிருந்து. | உரிய ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஏற்பட்ட மேலதிக செலவுகளை மீளப்பெற தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 வெளிக்கள விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை மாவட்டத்திலுள்ள கேஎல்2 மற்றும் கேஎல்3 ஒப்பந்த பொதிகள் 35.15 சதவீதம் மற்றும் 51.83 சதவீதம் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் அவைகள் 2019 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டிருந்தது.மேலும், கிரவல்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களின் நிர்மானத்தினை கவனத்தில் கொள்ளாது அது வீதிகளின் பல அடைவெளிகளில் தார்/காபட் இடப்பட்டிருந்ததுடன் ரூபா 772.84 மில்லியன் மற்றும் 747.47 மில்லியன் முறையே அவ் இரண்டு பொதிகளிற்கும் செலுத்தப்பட்டிருந்தது. | அவ் ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் மற்றும் வேலைகளின் இடைநிறுத்தம் காரணமாக ரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது மீள் விலை கோரல் செயற்பாடு தொடரப்படுகின்றது. மேலும், இவ் ஒப்பந்தத்தின் ஒப்பந்ததாரர் நீதிமன்றத்திடமிருந்து தடை உத்தரவினை எடுத்திருந்தார். | மேலும் தாமதமின்றி நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அக்கர 500 தொடக்கம் சாஹரபலன்சூரிய வீதியின்(ஜடி30) 3+700 எனும் இடத்தில் அமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிழக்கீழ் பாலம் ஒரு புதிய நிழக்கீழ் பாலத்தின் நிர்மானத்திற்காக இடிக்கப்பட்டிருப்பினும், அது ஒப்பந்த பொதி கேஎல்03 கைவிடப்பட்டதன் காரணமாக 2021 மார்ச் 10 இலான வெளிக்கல விஜய திகதி வரை கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. வீதிகளின் பாவனையாளர்கள் அசௌகரியங்களிற்கு முகம் கொடுத்ததுடன் வீதியினை தொடர்புபடுத்த விதியின் பக்கத்திலுள்ள தனிப்பட்ட காணியினை பயன்படுத்துவதனூடாக தற்காலிக தீர்வினை ஏற்படுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அவ் ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் மற்றும் வேலைகளின் இடைநிறுத்தம் காரணமாக ரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது மீள் விலை கோரல் செயற்பாடு தொடரப்படுகின்றது. மேலும், இவ் ஒப்பந்தத்தின் ஒப்பந்ததாரர் நீதிமன்றத்திடமிருந்து தடை உத்தரவினை எடுத்திருந்தார். | மேலும் தாமதமின்றி நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சில வீதிகளின் புனர்நிர்மானம் ஏபீசி அடுக்கினை இட்டதன் பின்னரே கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அவ் ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் மற்றும் வேலைகளின் இடைநிறுத்தம் காரணமாக ரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது மீள் விலை கோரல் செயற்பாடு தொடரப்படுகின்றது. மேலும், இவ் ஒப்பந்தத்தின் ஒப்பந்ததாரர் நீதிமன்றத்திடமிருந்து தடை உத்தரவினை எடுத்திருந்தார். | மேலும் தாமதமின்றி நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 புறநடையான கொடுப்பனவுகள்

| **கணக்காய்வு விடயம்**<br>--------------------------- | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**<br>-------------------- | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்**<br>------------------------ |
|---|---|---|
| ரூபா 290.81 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள்மீளாய்வாண்டின் போதான வழங்கப்படாத/பயன்படுத்தப்படாத வருமானங்கள் மீது கடன்வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட ஒப்படைப்பு கட்டணங்கள் ரூபா 1,471.26 மில்லியனாக இருந்தது. | ஒப்படைப்பு கட்டணங்களின் கொடுப்பனவு அது ஒரு சிக்கனமற்ற கொடுப்பனவாக இருப்பினும் தவிர்க்க முடியாததாகும். ஆனால் அது கட்டணங்களின் இலக்குகளை அடைவதனூடாக குறைக்க முடியும். | தேவையற்ற கிரயங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |